OS. 56/2022

நாள். 22.01.2026.

வா.சா.1 – பாண்டி தபெ.முருகேசன்

<u>11, 14 மற்றும் 15 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவா சொத்து உட்பட சர்வே எண். 211 ல் கண்ட 11 ஏக்கர் நிலம் முன்பு நல்லதம்பி தேவருக்கு பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். நல்லதம்பி தேவருக்கு ராமசாமிதேவர், இருளாண்டிதேவர் ஆகிய இரண்டு ஆண்மக்கள் மட்டுமே வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் கிராம வழக்கப்படி சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.211 ல் கண்ட 11 ஏக்கர் நிலத்தில் வடபுரம் 5 ஏக்கர் 50 சென்டு ராமசாமி தேவருக்கும், தென்புறம் 5 ஏக்கர் 50 சென்டு இருளாண்டி தேவருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இருளாண்டி தேவருக்கு 1, 2 வாதிகள் தவிர லெட்சுமி, கணேசன், முத்துச்சாமி, பாண்டித்துரை, வீரபாண்டியன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்களில் 1, 2 வாதிகள் மற்றும் லெட்சுமி ஆகிய மூவருக்கும் 1989 ம் ஆண்டுக்கு முன்பே திருமணம் நடைபெற்று அவரவர் கணவர் வீட்டாருடன் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். இருளாண்டி தேவர் பாகத்தில் கிடைத்த 5 ஏக்கர் 50 சென்டில் மேல்புறம் 1 ஏக்கர் 80 சென்டை இருளாண்டி தேவரும், அவரது மகன்களும் கருப்பையா என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். மீதமுள்ள 3 ஏக்கர் 20 சென்டில் இருளாண்டி தேவரும், அவரது மகன்களும் 1 ஏக்கர் நிலத்தை பாலுச்சாமி என்பவருக்கு 06.07.1972 ம் தேதி கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு 1972 க்கு முன்பே கிரையம் ஏற்பட்டுவிட்டதால் இருளாண்டி தேவரின் சொத்துக்களில் பெண்பிள்ளைகளுக்கு இந்து வாரிசு உரிமை சட்டத்தின்படி எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இருளாண்டி தேவரும அவரது மகன்களும் ஏற்கனவே கிரையம் கொடுத்த 2 ஏக்கர் 80 சென்டு போக 2 ஏக்கர் 70 சென்டு நிலத்தை 10.05.1980 தேதியில் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அந்த

வாய்மொழிபாகத்தின் அடிப்படையில் இருளாண்டி தேவருக்கும், அவரது ஆண்பிள்ளைகளுக்கும் தனித்தனி பட்டாக்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1980ம் ஆண்டு சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரிக்கும்போது இந்து வாரிசு உரிமை சட்டத்தின்படி பெண் பிள்ளைகளுக்கு எந்த பாகமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இருளாண்டி தேவரின் மகன் முத்துசாமி தனக்கு பாகமாக கிடைத்த சொத்தில் 22 ½ சென்டு நிலத்தை 28.11.1990ம் தேதி நாகலிங்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நாகலிங்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்த சொத்துக்கு வடக்கே 27.03.1983ம் தேதி முருகன் என்பவருக்கு முத்துசாமி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. முருகன் கிரையம் பெற்ற சொத்தை 05.07.1995ம் தேதியில் சேகரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. இந்த கிரையம் பெற்ற நபர்கள் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு தனித்தனி பட்டா ஏற்பட்டுவிட்டது என்றால் அது செல்லாது. கிரையதாரர்களும், பட்டாதாரர்களும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.211/7 ல் கண்ட சொத்து 211/7 ஏ 1, 211/7 ஏ 2, 211/7 பி என உட்பிரிவு செய்யப்பட்டு சுவான்தார்கள் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் அந்த பட்டா செல்லாது. சர்வே எண்.211/8 ல் கண்ட சொத்து சர்வே எண்.211/8 ஏ, 211/8 பி1 ஏ, 211/8 பி1 பி, 211/8 பி2, 211/8 பி3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.211/9 ல் கண்ட சொத்து 211/9, 211/9 ஏ 1, 211/10 ஏ 2 எனவும், சர்வே எண்.211/10 ஏ 2 ஏ எனவும், 211/9 ஏ 2 எனவும் தனித்தனி உட்பிரிவுகள் ஏற்பட்டு அவரவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டு தனிஅனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்களில் கண்ட பட்டாதாரர்கள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ஆட்சேபித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சொத்தில் உரிமை இல்லாததால்தான் நான் மேற்கண்ட சர்வே எண்களில் கண்ட பட்டாவை ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. நல்லதம்பி தேவருக்கு தாவா சொத்தை தவிர்த்து வேறு சொத்துக்களும்

இருந்தது என்றால் சரிதான். நல்லதம்பிதேவருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் சேர்க்காமல் தாவா சொத்துக்களுக்கு மட்டும் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு பகுதிபாக பிரிவினை வழக்கு என்ற தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.211/9 ஏ என 15ம் பிரதிவாதிக்கு உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டு அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அது செல்லாது. அந்த பட்டாவின் அடிப்படையில் சர்வே எண்.211/9 ஏல் கண்ட சொத்தை 15ம்பிரதிவாதி சுற்றி அடைத்து தென்னை மரங்கள் வைத்து தோப்பாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த தோப்பில் நீர்ப்பாசனத்திற்காக கிணறு, மோட்டார், மின்இணைப்பு இருந்து வருகிறது என்றால் சரிதான். சர்வே எண்.211/9 ஏல் கண்ட தோப்பில் 15ம்பிரதிவாதி ஒரு தார்ச்வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. 15ம் பிரதிவாதியின் மகன் முனீஸ்வரன் அந்தசொத்தில் 12 ஆண்டுகளுக்கு முன்பே ஒருவீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான், நான் ஆட்சேபித்தபோது நான் என் இடத்தில் கட்டிக்கொண்டிருப்பதாகவும், உங்கள் பாக இடம் உள்ளது என்றும் கூறினார். இருளாண்டி தேவர் மகன் முத்துசாமி தன் பாகத்திற்கு கிடைத்த சொத்தில் கிரையம் கொடுத்ததுபோக மீதம் உள்ள 22 சென்டு சொத்தில் 2 வீடுகள் தனித்தனியாக கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் கேட்டதற்கு என் பாக இடத்தில் கட்டுகிறேன் என்றும், உங்கள் இடம் உள்ளது என்றும் சொன்னார். முத்துசாமி பாகத்திற்கு கிடைத்த சொத்தில் கிரையம் கொடுத்த சொத்துபோக இதர சொத்துக்கள் சர்வே எண்.211/8 ஏ என உட்பிரிவாகி அவர் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் சரியல்ல. முத்துச்சாமி தனது பாகத்திற்கு கிடைத்த சொத்தில் சுற்றி மட்டைவேலி அமைத்து, தென்னைமரங்கள், கிணறு, பம்புசெட், மின்இணைப்பு பெற்று தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் அது செல்லாது. முத்துச்சாமியின் மகன் 14ம் பிரதிவாதி பாஸ்கரன் 30 வருடங்களுக்கு முன்பே தமிழக அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்று மீனவர் காலனி வீடு ஒன்றை கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த காலனி வீட்டிற்கு

அருகிலேயே 14ம் பிரதிவாதி பாஸ்கரன் 25 வருடங்களுக்கு முன்பு தார்ச்வீடு கட்டி குடும்பத்துடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் அவர்கள் உங்கள் இடம் கிடக்கு தருகிறோம் என்று சொன்னார்கள். 11ம் பிரதிவாதியும் தமிழக அரசாங்கத்திடமிருந்து காலனிவீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, ஆனால் வீடு கட்டியுள்ளார்கள். காலனிவீட்டிற்கு அருகில் 11ம் பிரதிவாதி 25 வருடங்களுக்கு முன்பாகவே வீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 11, 14 மற்றும் 15 பிரதிவாதிகள் வீடுகட்டி அனுபவம் செய்து வருவதை நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதால்தான் ஆட்சேபிக்கவில்லை என்றும், தாவா சொத்தில் எனக்கு பங்கு, பாத்திய உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.